பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 11 செவ்வாய்க்கிழமை (26.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 31

# செஞ்சிலுவைக் குழுவின் வழித்துணையுடன்

# மாலுமிகள் தரைவழியாக கொழும்பு வருகை

## கிளிநொச்சியில் வைத்து புலிகள் வழியனுப்பினர்

கொழும்பு, டிசெம்பர் 26

**விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த ஜோர்தான் நாட்டு சரக்குக் கப்ப லின் மாலுமிகள் 25 பேரும் நேற்று கிளி நொச்சியில் இருந்து தரை வழியாகக் கொழும்பு வந்து சேர்ந்தனர்.**

**போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின ரும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரும் வழித்துணை வழங்க வாகன் அணியில் மாலுமிகள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர்.**

முன்னதாக கிளிநொச்சியில் வைத்து மாலுமிகள் 25 பேரையும் விடுதலைப் புலிகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதி நிதிகளிடம் கையளித்தனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் இணைப்பாளர் பாவரசன் ஆகியோர் கப்பலின் கப்டனையும், மாலுமிகளையும் நேரில் வந்து வழியனுப்பி வைத்தனர்.

அச்சமயம் கப்பலின் கப்டனான ஈராக் நாட்டைச் சேர்ந்த அப்துல் ஜவ் பார், அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கனைக் கட்டியணைத்துப் பிரியாவிடை பெற்றார்.

செஞ்சிலுவைச்சர்வதேசக் குழு மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வாகனங்கள் அடங்கிய அணியில் மாலுமிகள் 25 பேரும் ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக வவுனியா சென்று பின்னர் அங்கிருந்து கொழும்புக்குப் பயணமாகினர்.

எகிப்து மற்றும் ஜோர்தான் நாடுகளைச் சேர்ந்த இந்த மாலுமிகளைச் சொந்த நாட்டுக்கு அழைத்துச் செல்வதற்காக சம்பந்தப்பட்ட ஜோர்தானியக் கப்பல் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் இன்று கொழும்பு வருகின்றார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

14 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை ஏற்றிக் கொண்டு இந்தியாவிலிருந்து தென்னாபிரிக்கா செல்லும் வழியில்

(08ஆம் பக்கம் பார்க்க)



கப்பல் கப்டன் - அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனை கட்டியணைத்து பிரியாவிடை பெறுகின்றார். ஊடகப் பொறுப்பாளர் தயாமாஸ்டர் அருகில் காணப்படுகிறார்.

## எஸ்.கே.ரி. காலமானார்

யாழ்ப்பாணம், டிசெ.26

உதயன் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரும் முதலாவது பொது முகாமையாளருமான சி.க.திருச்சிற்றம்பலம் காலமானார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளை வெளியிடுவதில் முன்னின்று உழைத்த அவர், ஆரம்பகாலத்தில் அவற்றுக்கு அத்திபாரமிட்டவர்களில் ஒருவர்.



உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் வளர்ச்சியிலும் அவற்றின் முன்னேற்றத்திலும் தனது இறுதிக் காலம் வரை அக்கறை காட்டியவர்.

'திரு' என்றும் 'எஸ்.கே.ரி.' என்றும் அழைக்கப்பட்ட அவர், ஒரு பத்திரிகையாளரும், சிறந்த நிர்வாகியும் ஆவார்.

தனிச் சிங்களச் சட்டத்தின் விதிகளுக்குக் கீழ் பணியாற்ற விரும்பாமல் அரசாங்கப் பதவியைத் துறந்தவர்.

'உன்னைப்பற்றி' என்ற உளவியல் மாதச் சஞ்சிகையை அறுபதுகளில் வெளியிட்டவர். பின்னர் ஈழநாடு ஆசிரியர் குழுவிலும் பணியாற்றினார்.

சங்கானைப் பட்டின சபையின் தலைவராகவும் மற்றும் பல பொது அமைப்புகளிலும் அங்கம் வகித்து பல்துறை சமூக சேவைகளில் ஈடுபட்டு உழைத்தவர்.

எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

## நவம்பர் மாதம் 29ஆம் திகதிக்குப் பின்னர் வாகரைக்கு உணவு அனுப்பப்படவில்லை

### யுனிசெவ் பேச்சாளர் தகவல்

மட்டக்களப்பு வாகரைப் பகுதிக்கு கடந்த மாதம் 29 ஆம் நாளுக்குப்பின்னர் உணவுப் பொருள்கள் எவையும் அனுப்பப்படவில்லை என யுனிசெவ் தெரிவித்துள்ளது.

உணவு பொருள்கள் நவம்பர் மாதம் அனுப்பப்பட்ட பின்னர் இன்று வரை சிறிதளவு உணவுப் பொருள்கள் கூட அங்கு அனுப்பிவைக்கப்படவில்லை என யுனிசெவ்வின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுதவிர கடத்தல்கள், காணாமல் போதல்கள், படுகொலைகள் அதிகரித்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு யோசனைகள் தொடர்பாக சர்வகட்சிக்குழு தொடர்ந்து பேசும்

கொழும்பு, டிச. 27

வடக்கு, கிழக்கு மோதலுக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் தொடர்ந்து பேச்சு நடத்துவார்கள் என சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சர்வகட்சிப் பிரதிநிதிகளின் இறுதித்தீர்வு ஆவணத்தை தயார் செய்யமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - இறுதித் தீர்வு ஆவணத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் பெறமுடியும் என ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளபோதும், நேர அட்டவணைப்படி இந்த ஆவணத்தைத் தயார் செய்வதில் சிரமம் உள்ளதாகவும் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இந்தத் தீர்வு ஆவணத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிமுனை தேவாலயத்தில் அதிகாலை கைக்குண்டு வீச்சு

மன்னார் - பள்ளிமுனை புனிதலூசியா ஆலய வளாகத்தில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். மேலும் 3 பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை குறிப்பிட்ட ஆலயத்தில் நத்தார் தின வழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பொலிஸார்

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் கைத்தொலைபேசிகள் நேற்று நண்பகலுக்குப்பின் இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.26

குடாநாட்டில் நேற்று நண்பகலுக்குப்பின் கைத்தொலைபேசிகளின் சேவை ஓரளவு சீரானது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக குடாநாட்டுக்கான கைத்தொலைபேசிச் சேவைகள் செயலிழந்திருந்தன.

கடந்த 22ஆம் திகதி முதல் வலி. கிழக்குப் பகுதியில் சில பிரதேசங்களில் கைத்தொலைபேசிச் சேவைகள் செயற்பட ஆரம்பித்தன.

யாழ். நகரம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று நண்பகலுக்குப் (08ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகள் தலைமன்னாரில் கைது

மன்னார், டிசெ.26

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய 23 அகதிகள், தலைமன்னார்ப் பிரதேசத்தில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். நேற்று முன்தினம் இந்த அகதிகள் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வர் கருணாநிதியை கூட்டமைப்பினர் ஞாயிறன்று மீண்டும் சந்தித்துப் பேசினர்

### வடக்கு - கிழக்குப் பிரிப்பு முயற்சிகள் பற்றி விளக்கம்

கொழும்பு, டிசெ.26

இந்தியா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் மீண்டும் தமிழக முதல்வர் மு. கருணாநிதியைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்குடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின் பலாபலன்களைப் பற்றியும் வடக்கு - கிழக்கை நிரந்தரமாகப் பிரித்துவிட அரசு தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றமை பற்றியும் கருணாநிதியிடம் கூட்டமைப்பினர் விளக்கிக் கூறியுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் பிரிக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லையென கூட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நேற்று அமைதியான கிறிஸ்மஸ்தின கொண்டாட்டம்

ஏறாவூர், டிச. 26

கிழக்கு மாகாணத்தில் வாழும் கிறிஸ்தவ மக்கள் நேற்று அமைதியான முறையில் நத்தார் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

கிழக்கில் கிறிஸ்தவ மக்கள் செறிந்து வாழும் சகல பிரதேசங்களிலும் நத்தார்க் கொண்டாட்டங்கள் களை கட்டியிருந்தன.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள றோமன் கத்தாலிக்கத் தேவாலயங்கள் அனைத்திலும் நள்ளிரவு கிறிஸ்மஸ் திருப்பலி ஆராதனைகள் இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் சிக்குன் குன்யா வைரஸ் காய்ச்சல், அகதிகள் பெருக்கம் மற்றும் அடைமழை என்பவற்றுக்கு மத்தியிலும் கிறிஸ்தவ மக்கள் இயேசுநாதரின் பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கந்தசாமி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி 24.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கண்ணம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு - சீதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் பவளத்தின் அன்புக் கணவரும் பாலச்சந்திரன், பாலநாயகி, ரூபச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா, வசந்தா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம் இராசமணி, தம்பிராசர,சின்னத்துரை மற்றும் துரையம்மா, இரத்தினம் (மகான்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் துவாரகா, சதுர்த்திகா, தரி சேயோன், றொசானா, நிதர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2006) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப்பிலி இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S.தியாகலிங்கம்

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.
(65054)

## ஐசக் ஞானப்பிரகாசம்



நவாலி தெற்கைச் சேர்ந்த ஐசக் ஞானப்பிரகாசம் 25.12.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசுவா ஐசக் - மேரி பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வண.சேவக் ஐ.த.இயேசுசகாயம் (சின்னண்ணன் - ஆச்சிரமம் மருதனார்மடம்), காலஞ்சென்ற ஐ.பொன்னுத்துரை, காலஞ்சென்ற ஐ.அருளையா, ஐ.தம்பிராஜா (கொழும்பு), வண.ஐ.செல்வரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இ.ஞானக்கனி, றொபின் (ஜேர்மனி), தே.வசந்தி (டென்மார்க்), அ.ஜெயந்தி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), துஸ்யந்தி (யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆ.இயேசுரட்ணம் (ICRC - வவுனியா), றொ.ஜெயந்தினி (ஜேர்மனி), இ.தேவரூபன் (டென்மார்க்), இ.அருள்றொகான் (யா/காரைநகர் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற அரியமலர், காலஞ்சென்ற ஞானசிகாமணி, கனகமணி ஆகியோரின் மைத்துனரும் குணாளன், ஜெருஷன், நிரோஜன், அபிநயா, அனுசியா, அகல்யா, சபீனா, ஆரோன், எப்சியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
(65048)

## சின்னமுத்து திருநாவுக்கரசுமுதலி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்-துர்பனை ரிவப்பிரகாச மகா வித்தியாலயம்)

மட்டக்களப்பு, தாமரைக்கேணியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, ஐயனார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு முதலி 25.12.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னமுத்து-சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் புனிதவதியின் அன்புக்கணவரும் தேவராணியின் சகோதரனும் ஆறுமுகம் - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் இளங்கோ (லண்டன்), இளவழகன் (லண்டன்), இளமுருகன் (சுவிஸ்), பகீரதி (லண்டன்) அருள்நாவுக்கரசர் (C.M.E கல்வி நிலையம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தமிழ்ச்செல்வி (இந்தியா), செசிலியா (லண்டன்), பவானி (சுவிஸ்), பாஸ்கர் (லண்டன்), சசிரேகா ஆகியோரின் மாமனும் நிரோஜா, பிரியங்கா, வைதேகி, இராமகிஸ்னா, ராதாகிஸ்னன், மிதுலா, இளந்திரையன், நிலவன், பாலச்சந்தர், சுதர்சன், அபிராமி, ஜனுசன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி.அருள்நாவுக்கரசர், (மகன்).

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

## திருமதி நாகலிங்கம் சிவக்கொழுந்து

அச்சுவேலி தெற்கு, பயிற்றோலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் சிவக்கொழுந்து 25.12.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் கமலாம்பிகை, காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் கணேசமூர்த்தி (ஜேர்மனி), சிவபாதசுந்தரம், காலஞ் சென்ற அன்னராசா, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் காங்கேசு, வசந்தமலர், ரஞ்சனி, காலஞ்சென்ற கிருபாமூர்த்தி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முழக்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

அச்சுவேலி தெற்கு,
பயிற்றோலை, அச்சுவேலி. (சி/51656) நா.சிவபாதசுந்தரம் (மகன்).

## முத்து அப்புக்குட்டி துரைச்சாமி



147, ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும், அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து அப்புக்குட்டி துரைச்சாமி 25.12.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து அப்புக்குட்டி - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பவளம் தம்பதியரின் மருமகனும் புஸ்பலதாவின் கணவரும் துஸ்யந்தன் (இ.வங்கி), துஷாந்தி, நிஷாந்தி, பிரியந்தி ஆகியோரின் தந்தையும் நகுலேஸ்வரனின் மாமனும் காலஞ் சென்றவர்களான இராசையா, சரஸ்வதி, மற்றும் செல்வராஜா (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தியாகராஜா (இலங்கை ஆணைழகன்), கந்தசாமி, மற்றும் காமாட்சியம்மா, கமலராணி, நல்லையா, காலஞ்சென்ற பரமசிவம் ஆகியோரின் சகோதரனும் முறளிதரன் (ரவி), புஸ்பராணி, பாலறஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப ஒரு மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு.

## திருத்தம்

நேற்றைய உதயனில் 4ஆம் பக்கத்தில் வெளியான யாழ்.மத்திய கல்லூரி சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர் இ.பாலசுப்பிரமணியத்தின் மணிவிழாச் சிறப்பிதழில் வாழ்த்துச் செய்தியில் ஆசிரியர் வட்டத் தலைவர் **த.வரதராஜா** எனத் திருத்தி வாசிக்கவும்.

த.தவராஜா என வெளியானது தவறானது. வருந்துகின்றோம்.

-ஆசிரியர்.

## தவறிவிட்டது

செல்லையா இராசத்தினம் என்பவருடைய தே.அ.அட்டை (593560511V), தொழில் அடையாள அட்டை (ஓய்வூதியம்), விசேட அ.அட்டை (ஆயுங்கால் நிரந்து) என்பன சங்கானையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் (தனியார் பேருந்தில்) 21.12.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிரதம அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர் சதாசிவம்

காரைநகர், பத்தர் கேணியடியைச் சேர்ந்த அம்பலவாணர் சதாசிவம் 23.12.2006 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப 1 மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**அ.ஞானேஸ்வரன்.** *(தம்பி).*

*பத்தர் கேணியடி,*
*காரைநகர்.*

## நாகரத்தினம் நவரட்ணம்



எம்.எம்.வி றோட், காளிகோயிலடி, நெல்லியடியைச் சேர்ந்த நாகரத்தினம் நவரட்ணம் நேற்று (25.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நாகரத்தினம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் திரவியம் (கனடா), சிவனேசன் (கனடா), சிவசோதி (லண்டன்), சிவபாக்கியம், ராசமலர் ஆகியோரின் சகோதரரும் மயூரன், மைதிலி (ஆசிரியை) ஆகியோரின் பெரிய தந்தையும் உதயச்சந்திரிக்கா, தனுஷா (ஆசிரியை), பீரபு ராஜ் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

*தகவல்:*
**வ.மயூரன்**

*மருதம் இரும்பகம்,*
*நெல்லியடி.*

## சந்திரசேகரம் சபாரத்தினம்

(மேஸ்திரியார் சபா)

நீண்டியம்பற்றை, புலோலி வடகிழக்கைச் சேர்ந்த சந்திரசேகரம் சபாரத்தினம் நேற்று (25.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சகுந்தலாவின் அன்புக் கணவரும் பாலதி, சபேசன், சஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**சகுந்தலா** *(மனைவி)*

*நீண்டியம்பற்றை,*
*புலோலி வட கிழக்கு,*
*பருத்தித்துறை.*

## முருகேசு நாகராசா



அளவெட்டி தெற்கை (மாகியப்பிட்டி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நாகராசா 25.12.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரெத்தினத்தின் அன்புக் கணவரும் தருமராசா, தில்லைராசா, (பிரான்ஸ்), லோகராசா (பிரான்ஸ்), ராகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.12.2006) திங்கட்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.தருமராசா (மகன்).

மாகியப்பிட்டி,
அளவெட்டி தெற்கு.
(65064)

## உளம் நிறைந்த வாழ்த்துக்கள்



2006ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் **146** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த சீனி வாசகம் வீதி, கொட்டடியைச் சேர்ந்த

**தவராஜன் - சுமதி**
தம்பதியரின் செல்வப்புதல்வன்

**தனுஜன்**

(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

**இவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**மாமா, மாமி,**
**மச்சான் (ஜெயந்)**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### செல்வன் சிறிஸ்கந்தராஜா ரதீசன்

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த *சிறிஸ்கந்தராஜா - கமலாதேவி* தம்பதியரின் செல்வப் புதல்வன் ரதீசன் 2006ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

பாராட்டி வாழ்த்துபவர்கள்:

(சி/51653) *கணேஸ் (மாமா), அனந்திதாதேவி (மாமி).*

## முக்கிய அறிவித்தல்

வெதுப்பக உற்பத்திகளான கேக், பேபிறக்ஸ், றக்ஸ், மடத்தல் மற்றும் வெதுப்பக பொருள்கள் விற்கும் வியாபாரிகள் தாங்கள் விற்கும் பொருள்களின் உற்பத்தியாளரான வெதுப்பகத்தின் பெயர் மக்களின் பார்வைக்கு விற்பனை நிலையத்தின் முன் வைக்கப்படவேண்டும். அத்துடன் அரசாங்க அதிபரினால் அறிவுறுத்தப்பட்ட விலைகளில் அதாவது,

| | |
|---|---|
| கேக் 1Kg | ரூ.350.00 |
| பேபிறக்ஸ் 100g | ரூ.20.00 |
| றக்ஸ் 10 கொண்டது | ரூ.20.00 |
| மடத்தல் 10 கொண்டது | ரூ.20.00 |

ஆகிய விலைகளில் விற்பனை செய்வதை விளம்பரப்பலகையில் உறுதிப்படுத்துவதுடன் அப்படி செய்யாத விற்பனையாளர்களிடமிருந்து பொருள்கள் யாவும் பறிமுதல் செய்வதுடன் தண்டப் பணமும் உரிய அதிகாரியினால் அறவிடப்படும் என்பதை சகல விற்பனையாளருக்கும் அறியத்தருகின்றோம். நுகர்வோர்களே மேற்கூறிய விலைக்கு அதிகமாகக் கொடுத்து பொருள்களை வாங்காதீர்கள். கூடிய விலையில் விற்பனை செய்பவர்களை யாழ். செயலகத்திற்கு அறிவியுங்கள். இது அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய.

அங்கத்தவர்கள் கேக் சாமான்களை புதன்கிழமை 27.12.2006 பெற்றுக்கொள்ளவும். கேக் வெதுப்பகத்தில் மட்டும் விற்பனை செய்யவும்.

யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.
இல.64, 3ஆம் குறுக்குத்தெரு.
(65062)

உரிய நடவடிக்கை அரச அதிபர், யாழ்ப்பாணம் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் M.A. துரைச்சாமி

(பாதுகாப்பு உத்தியோகத்தர்,இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை)



இலங்கைவங்கி மாவட்ட காரியாலயம் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை,மானிப்பாய், சுன்னாகம் ஆகிய கிளைகளில் 27 வருடங்களாக கடமையாற்றி எல்லோரது நன்மதிப்பையும் பெற்ற எமது நண்பர். அன்னாரது பிரிவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,
இலங்கை வங்கி.

# மரண அறிவித்தல்

## சுப்பையா பரமசிவம்



இணுவில் கிழக்கு, அங்கிளிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பரமசிவம் 25.12.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு சுப்பையாவின் அன்பு மகனும் இந்திராதேவியின் அன்புக்கணவரும் ஐங்கரன் (லண்டன்), சிவசக்தி, சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மா சுந்தரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற பாக்கியலஷ்சுமி நாகராசா ஆகியோரின் சகோதரனும் சரோஜினிதேவி, பராசக்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அங்கிளிப்பாய்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.
(65064)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் தரிப்பிடங்களில் இடநெருக்கடி வாகனங்களை நிறுத்தமுடியாது மக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்.நகரப் பகுதிகளில்வீதிகளில் வாகனங்களை நிறுத்துவது தடைசெய்யப் பட்டுள்ளதால் வாகனத் தரிப்பிடங்களில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்த இடமில்லாமல் பொதுமக்கள் சிரமப்படுகின் றனர்.

பல்வேறு தேவைகளுக்காக நகரப் பகுதிக்கு வரும் மக்கள் தமது வாகனங்களை நிறுத்த இடமின்றி அலைவதாகக் கூறுகின் றனர். (202-88)

# கொழும்பு பாதுகாப்பு வலயப்பகுதியில் ஜனாதிபதிக்கு ஆடம்பரப் பதுங்குகுழி?

## 'சண்டே லீடர்' பத்திரிகை தகவல்

கொழும்பு, டிசெ. 26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும், அவரது குடும்பத்தினரினதும் பாதுகாப்பிற்காகக் கொழும்பில் அதியுயர் பாதுகாப்பு வலயம் ஒன்றில் 40 கோடி ரூபா செலவில் ஆடம்பரப் பதுங்குகுழி (பங்கர்) ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தகவலை 'சண்டே லீடர்' ஆங்கில வார இதழ் நேற்றுமுன்தினம் வெளியிட்டிருக்கிறது.

பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டு அப்பத்திரிகை, பதுங்குகுழி அமைக்கப்பட்டு வரும் இடத்தையோ அல்லது இந்நிர்மாணப் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனத்தின் பெயரையோ குறிப்பிடவில்லை.

அப்பத்திரிகையில் இது தொடர்பாக மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இப் பதுங்கு குழியின் நிர்மாணப் பணி இவ்வருடம் ஜுலை முதல் ஆரம்பமாகி தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கான நிதியைத் திறைசேரி வழங்கி வருகிறது.

இது தொடர்பாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மையத் தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகலவைத் தொடர்பு கொண்டு 'சன்டே லீடர்' வினவியபோது இதுபற்றி எதுவும் தெரியாது என அவர் கூறிவிட்டார்.

பதுங்குகுழி நிர்மாணம் தொடர் பான செய்தியை வெளியிட்டால் பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் புதிதாகச் சேர்க்கப் பட்டிருக்கும் புதிய துணை விதிகள் ஊடகத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்படுமா என அவரிடம் கேட்டபோது, அந்த துணை விதிகள் பயங்கரவாதத்தை மட்டுமே கட்டுப்படுத்தும் என்றும், ஊடகத்தைக் கட்டுப்படுத்தாது - அதன் சுதந்திரத்தைப் பாதிக்காது என்றும் அவர் கூறினார்.

இந்த ஆடம்பரப் பதுங்குகுழி, ஒரு வீட்டிலிருக்கும் அத்தனை வசதிகளையும் கொண்டிருக்கும். இதன் நிர்மாணப் பணி தொடர்ந்து செல்கையில் செலவு அதி கமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. - இவ்வாறு அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# தென்மராட்சியில் திடீர் சோதனையின் போது மறைத்துவைக்கப்பட்ட பொருள்கள் சிக்கின

யாழ்ப்பாணம், டிசெ.26

பொதுமக்களுக்கு வழங்கவெனக் கொடுக்கப்பட்ட நானாவிதப் பொருள்கள் சில ''லநோக்குக் கூட்டுறவுச சங்கக் கிளைக் கடைகளில் பங்கீட்டு அட்டைகளுக்கு வழங்காமல் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

சங்கப் பொதுமுகாமையாளர் கிளைக் கடைகளில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது கடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருள்கள் கண்பிடிக்கப் பட்டு மீளப் பெறப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு விநியோகத்திற்கென கொடுக்கப்பட்ட பொருள்களை விநியோகிக்காமல் மறைத்து வைத்திருந்த கிளை முகாமையாளர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. பொதுமகாமையாளரின் திடீர்ப் பரிசோதனைகள் நன்மையளித்துள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஆழிப்பேரலை பாதித்த பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்கு தொழிற்சாலைகள்

## மணற்காடு, பொலிகண்டியில் அமைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 26

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நோக்குடன் சமூக செயற்பாட்டு மையம் 2 ஆடைத் தொழிற்சாலைகளை அமைத்துள்ளதாக மையத்தின் இணைப்பாளர் தெரிவித்தார்.

மணற்காடு, பொலிகண்டி ஆகிய பகுதிகளில் ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பெண்களின் தொழில்வாய்ப்புக்காகவே இந்தத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளுக்குத் தேவையான 15 தையல் இயந்திரங்களும் மூலப்பொருள்களும் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இத்தொழிற்சாலைகளின் நிர்வாகப் பொறுப்பு அப்பிரதேச பெண்கள் உள்ளூராட்சி சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (1-202-88)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.26

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா மாணவர்களக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல்10 மணியளவில் மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா விரிவுரை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியினை பயின்று கொண்டிருக்கும் மாணவர்களையும், மீன் பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியினை மேற் கொள்வதற்கு புதிதாக தங்களைப் பதிவு செய்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளது.

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

காந்திகிராம கிராமிய பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பமுடிவு திகதி இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என பணிப்பாளர் வி.கேசவன் தெரிவித்தார். (202-88)


## வாழ்த்துகின்றோம்



எமது மன்றத்தின் மூத்த கலைஞரான
கலாபூஷணம் சிற்பச் செல்வன்
ஏ.வி. ஆனந்தன்
அவர்களின் முயற்சியின் வெளிப்பாடாக
அவரது சிற்பாலயம் கலைக்கூடத்தில்
இன்று இடம்பெறும்.
சுனாமி அவலங்களின் சிற்பம்
திரைநீக்கம் செய்யப்படும் நிகழ்வு சிறப்புறவும்
கலைஞர் ஏ.வி. ஆனந்தனின் கைவண்ணத்தில்
இதுபோன்ற தலைசிறந்த கலைப்படைப்புகள்
மேன்மேலும் உருவாகவும் மனப்பூர்வமாக
வாழ்த்துகின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(65004)
இயக்குநர், அங்கத்தவர்கள்,
திருமறைக்கலா மன்றம்.

## 2 ஆம் வருட நினைவஞ்சலி



ஜெ.கிறிஸ்ரீன் அபிஷா



ஜெ.கிறேஸ்வர்ஷா

21.02.1998 மண்ணுலகில் 27.11.2004
இயேசுவின் பாதத்தில்
26.12.2004
உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்கிறவன்
மரித்தாலும் வாழ்வான்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
(65028)
R.ஜெயராசா குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வில் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
அன்ரன் மேரி ஜெலன்
(கலா)

மலர்வு 24 - 01 - 1964
உதிர்வு 26 - 12 - 2004

கடலொன்று கரைபுரண்டு
காவு கொண்ட உயிர்கள் பல
கலா நீயும் அவ் வலையால்
அள்ளுண்டு போனாயோ?

இவரின் பிரிவால் துயருறும்:
கணவர், பெற்றோர்,
பிள்ளைகள், சகோதரர்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(63722)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா தம்பிப்பிள்ளை

சங்கானை, கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய பிரதான வீதியில் வசித்த நடராசா தம்பிப்பிள்ளை 24.12.2006 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சந்திரிக்கா(சாரா), சுவிஸ் ராஜன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சீலன், சிட்டுவின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.12.2006 அன்று இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி லேன்,
சங்கானை.
தகவல்:
கு.சண்முகரத்தினம்.

### தம்பு பஞ்சாட்சரம்

(ஓய்வுபெற்ற Electronics Engineer)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பு பஞ்சாட்சரம் 24.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - தம்பு (ஓய்வுபெற்ற நில அளவையாளர், கோப்பாய் தெற்கு) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றகணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற O/A, K.K.S. Cement Factory-கொக்குவில்) தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் (சிங்கப்பூர்) அன்புக் கணவரும் செல்வராசா (U.S.A.), திருமதி செல்வராணி சண்முகநாதன் (U.K.), தேவராசா (கனடா), திருமதி வசந்தாதேவி சுகுணதீரன்(கொழும்பு), திருமதி இந்திராணி கதிரவேலு(கோப்பாய் தெற்கு), ஆனந்தராசா(கனடா), இரவீந்திரராசா(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரன் (சிங்கப்பூர்), ரஞ்சினி(U.K.), சுப்பிரமணியம் (சிங்கப்பூர்),ரோகினி(ஆஸ்திரேலியா), சுபாசினி(U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பா (சிங்கப்பூர்), ஜோதிராஜ்(U.K.), கிரிஸ்ரினா(சிங்கப்பூர்), சுந்தரம் (ஆஸ்திரேலியா), பென் (U.K.) ஆகியோரின் அன்பு மாமனும் திருமதி லீலாவதி செல்வரட்ணம் (கனடா),காலஞ்சென்ற திருமதி புஸ்பா சடாச்சரம், கே.குமரேசன் (Bahrain), கே.கேதீஸ்வரன்(Master feeds, Colombo) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2006 புதன்கிழமை மாலை சிங்கப்பூரில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி வி.சுகுணதீரன் (சகோதரி)
தொ.பே.: 3621485
K.கேதீஸ்வரன் (மைத்துனர்),
தொ.பே.: 5644296
[illegible]
(சகோதரன் - திருநெல்வேலி)
[illegible]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மகாதேவன் சதீஸ்
(மண்டைதீவு)

தோற்றம் 28 - 05 - 1978
மறைவு 18 - 12 - 2004

திதி: 26.12.2006

எங்கள் தவ விளக்கே எங்களை
நடைப்பிணமாக இருக்கவிட்டு நீங்கள்
தனியாக சென்றது ஏன்?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

கோண்டாவில் கிழக்கு.
(65024)
சித்தி.

## மறக்க முடியாது நினைவலைகள்

சுலோஜனா சூரியகுமாரி
சூரியமூர்த்தி



அன்னை மடியில் 17 - 12 - 1976
கடலின் பிடியில் 26 - 12 - 2004

கள்ளங் கபடமில்லா உள்ளத்துடன்
மலர்ந்த முகத்துடனும் – எமக்கெல்லாம்
வழிகாட்டியாய் இருந்தாய்
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறிடுமா உந்தன் நினைவுகள்
விண்ணும் மண்ணும் உள்ளவரை
நின் நினைவிருக்கும் எம்முடன்

தெய்வ வாசா,
கரணவாய், கரவெட்டி.
(65019)
தகவல்:
குடும்பத்தினர்.

## 2 ஆம் வருட நினைவுகளோடு...



அமரர்
முருகேசு பிரதீப்

தாயின் மடியில் 11 - 08 - 1983
கடலின் பிடியில் 26 - 12 - 2004

எண்ணத்தில் விரிந்து
விளையாடிடும் உந்தன்
கள்ளமில்லா நெஞ்சத்தை
கடல் கவர்ந்துதான்
வருடம் இரண்டாச்சோ?
நம்ப முடியவில்லையே.....
கலங்குகின்றோம் பிரதீப்
கண்ணீர் விழிகளுடன்.....

-குடும்பத்தினர்.

தகவல்:
வே.தம்பிப்பிள்ளை
திருப்பதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(63729)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகளில்...





தாயின் மடியில் 18.01.1975 | நோயின் பிடியில் 18.08.2002

திருமதி
**மோகனதாஸ் வதனி (சுதா)**

சுவாமியின் படைப்பில் 03.10.1978 | சுனாமியின் அழிப்பில் 26.12.2004

**நல்லையா பிரகலாதன்**
(கண்ணன்)

பார்புகழ் வாழ்ந்திருப்பீர் என்று நாமிருக்க
பைங்கிளிகளாய் நீவீர் பறந்து சென்றதேனோ...!

நித்தம் உம் நினைவுகளில்....

காளிகோயிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில். (63504)

அம்மா, சகோதரிகள்.

## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்....

மண் மகிழ 20 - 07 - 1983



கண் நெகிழ 26 - 12 - 2004

**அமரர் இராஜேந்திரன் நிஷாந்தன்**

சந்திர முகம் – நிலவு
சிரிக்கின்ற அழகு – கொள்ளை
பேசிப்பழகும் பண்பு – பணிவு– நீ
நிஷா(சா) ந்தனடா...!
அதிர்ந்து பேசாதவனே!
அன்பால் அரவணைத்தவனே! சுனாமி
உனக்கு விதியானது
உன் புத்திர பாசம்
அப்பாவையும் அழைத்தது
காலன் கூட உங்களைக் காயப்படுத்தவில்லை

(63625)

விக்ன பவனம்,
காளிகோயிலடி, மல்லாகம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## ஆழியில் அகப்பட்டு ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ

அன்னையின் மடியில் 30 - 11 - 1977



ஆழியின் பிடியில் 26 - 12 - 2004

**அமரர் குமாரசாமி பிரதீபன்**

இரண்டாண்டுகள் ஆனதுவோ
இப்போதும் இதயமே வெடிக்கிறது
பாவியால் நாம் துடிக்க பாதியிலே போனாயோ
அலைக்கு இரையான உன் நினைவில்
– கலையாது நாம் இருப்போம்
காளி அம்பாள் பாதத்தில் நீ இருக்க
வேண்டுகின்றோம் எந்நாளும்.

மில் லேன், மல்லாகம். (63705) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**பரமசாமி பாக்கியராஜ்**

காரைநகர், விளானைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம், சீனிவாசகம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பரமசாமி பாக்கியராஜ் (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை பண்டாரவளையில் காலமானார்.

அன்னார் பரமசாமி-யோகராணி தம்பதியரின் அன்பு மகனும் பவளராஜ், யோகராஜ், நவராஜ், பகீரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் கந்தையா, சுந்தரம்மா காலஞ்சென்ற பரமசாமி, செல்லம்மா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.12.2006 அன்று பண்டாரவளையில் நடைபெற்றன.

68, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
(65050) க.பரமசாமி (தந்தை)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியை செல்வி
வ.தேன்மொழி அவர்களின்
அன்புத் தந்தை
சாகித்தியரத்தினம்
**தியாகராசா சண்முகம் வரதராசன்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய குழாம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். ஆனைப்பந்தி
மெதடிஸ்த மிஷன்
வித்தியாலயம்.

## ஆழிப்பேரலை அனர்த்த விசேட வழிபாடு

ஆழிப் பேரலை அனர்த்த நினைவு நாள் விசேட வழிபாடும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தென்மட்டுவில் வேரற்கேணி கந்தசாமி கோயிலில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் விசேட சொற்பொழிவும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.
(1-202)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் பல்வேறு தொழில் பயிற்சி நெறிகளுக்கு இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வீட்டு மின்னிணைப்பு, நீர்க் குழாய் பொருத்துதல், மேசன் கட்டுமானம், அலுமினிய கட்டுமான பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் கோரப்பட்டுள்ளன.
(202)


# NLIIT COMPUTER COURSES

The Sri Lankan Center of Trinity University USA - Spain
O/L தகைமையுடன் 2 வருடங்களில்
நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகுங்கள்
B.Sc. in Computer Sciene

O/L மாணவர்களுக்கான குறுகிய கால
கணனி விரைவுப் பயிற்சிகள் ஆரம்பம்
சலுகைக் கட்டணம் காலம் - ஒரு கிழமை

அலுவலர்களுக்கான தனியான கணனி
விரைவுப் பயிற்சிகள் ஆரம்பம்

NORTH LANKA IIT
Main Street, Chankanai
T.P.: 4591647

(63534)


## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 - 10 - 1977



இறப்பு 05 - 01 - 2006

**தவேந்திரன் மதன்**

(பருத்தித்துறை நகராட்சி மன்ற பொது நூலக ஊழியர்)

ஆண்டு ஒன்று ஆகிவிட்டது
என் அன்பு மூத்த செல்வமே
உறவு ஒன்று முறிந்துவிட்டது
சிறகு ஒடிந்து பறந்துவிட்டது
இடம் ஒன்று வெற்றிடமாகிவிட்டது
காலன் உன்னை அழைக்கவில்லை
நயவர் தான் அனுப்பினார்கள்
உன் உடல்தான்எம்மை விட்டு பிரிந்தது
ஆனால் உயிர் எங்கள் உள்ளத்தில்...
நீர் மீண்டும் எம்மிடம் எப்போது வருவீர் ஐயா?
உங்கள் பிரிவால் தவிக்கும்...

முருகன் கோயில் வீதி,
தும்பளை, பருத்தித்துறை. (51648) குடும்பத்தினர், உறவினர்.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவில்




**அமரர் விமலநாதன் தர்சன்,**
**மு.அற்புததேவன், மு.பரமானந்தன், பீ.ராம்குமார்,**
**இ.தயாபரன், அ.காங்கேசன், அ.பதீசன்**

அவனி எல்லாம் போற்ற ஊர் புகழ பல்லாண்டு வாழ்வீர்கள்
– என்றிருந்தோம்
மார்கழி இருபத்தாறு ஆதிரை நாளிலே எம் சப்த செல்வங்களை
அழைத்துச் சென்றாள் கடலன்னை, கணப் பொழுதில்
பெற்றவர்களும், உற்றவர்களும் உள்ளம் குமுற – நம்
அன்புக்குரிய செல்வங்களைப் பறித்தெடுத்தாள்
ஆண்டாண்டுகள் சென்றாலும் எம் நெஞ்சங்களில்
என்றும் நீங்கள் அணையாத தீபங்களே.

கடவைப்புலம்,
சுன்னாகம். (63633)

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

## உளம் நெகிழ்ந்த ஓராண்டில்...



அரியாலையில் பிறந்து பொலிகண்டியில் சிவப்பேறு பெற்ற
**அமரர் கலாபூசணம் கந்தையா பாலசிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
அன்னையின் மடியில்: 05.08.1931
இறைவன் அடியில்: 05.01.2006
திதி: மார்கழி மாத பூர்வபக்க ஷஷ்டி 26.12.2006

கலை வாழ தான் வாழ்ந்த
கலை மகிழ்நன் இவன்
காவியம்படைத்த நாடகச் செம்மல்
எக்கலைகள் எம்மிடம் உண்டோ
அக்கலைகள் அத்தனையும் கற்ற ஆசான்
கலைமகிழ்நன், கலை வாருதி, நாடக மணி,
பண்ணிசைச் செல்வன், கலாபூசணம், முத்தமிழ் வித்தகர்
இவையெல்லாம் இவரால் பெரும் பேறு பெற்றன
நாடகப் பள்ளியில் நர்த்தனம் ஆடிய
நடராஜனோ இவன்
மேடையதிர பாடல் முத்து உதிர
ராஜ நடை போட்ட நடிகவேள் பாலாதானே
இசைமணி, நடனமணி, நாடகமணி, நல்லதோர் இதயமணி

எத்தனை மணிகள் இவன் நெஞ்சத்தில் மிளிர்ந்தன
அத்தனையும் அவன் புகழை அலங்கரித்தவை

காலத்தை வென்ற காவிய நாயகனே
காலனும் கவர்ந்து ஓராண்டாயிற்றே
நாடு போற்றும் நடிகனாய் நல்லதோர் நண்பனாய்
வீடு போற்றிய தலைவனாய் தந்தையாய்
அன்புக்கு அப்பாவாய் அரவணைப்பில் அன்னையாய்
அண்ணனாய் தம்பியாய் சற்குருவாய்
எல்லா வாழ்வும் வாழ்ந்த எங்கள் ஐயனே
கடமை முடித்து காலனடியடைந்த
ஓராண்டு நினைவில் உங்களை யெண்ணி
உருகி நிற்கும் உறவுகள் நாம்...

ஓம் சாந்தி!சாந்தி!!சாந்தி!!!

செந்தில்பதி
பொலிகண்டி மேற்கு
வல்வெட்டித்துறை. (51636) தகவல்: பா.பிரபாகரன் (மகன்)

நீங்கா நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சைவிட்டகலா ஓராண்டு நினைவு



அமரர்

**சரவணமுத்து தயானந்தம்**

அன்னைமடி 14.08.1926 ஆண்டவன் அடி 05.01.2006

திதி: ஷஷ்டி 26.12.2006

நற்புத்திரனாய் சகோதரனாய் கணவராய்
தந்தையாய் மாமனாய் பேரனாய்
அத்தனை கடமைகளும் தவறாது செய்துமுடித்த
உம் நினைவை மறந்தாலல்லோ நினைப்பதற்கு...
உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிங்கம் வீதி,
உடுவில். (63714)

## 2ஆம் ஆண்டு நினைவுகளில்..



அமரர்

**நடராஜா வடிவம்மி**

மண்ணில் 06-11-1913 விண்ணில் 17-12-2004

திதி: 26.12.2006

கொஞ்சுமொழி பேசிக் குறுநடையழகூட்டி...
கெஞ்சினாலும் கிடைக்காத குடும்பத்
தலைவியம்மா...
நெஞ்சாறா நினைவுகளில் கலங்கிடும் மகளும்...
கொஞ்சிக்குலாவிய பாட்டியைத் தேடும்
பேரரும், பூட்டரும்
வஞ்சகன் காலனவன் கணக்கை முடித்திடினும்...
நெஞ்சினில் நிழலாடும்...
நினைவுகள்தான் நீங்கிடுமோ...

29, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். (65020)
- குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில் 13 * 10 * 1920

விண்ணுலகில் 27 * 11 * 2006

**சின்னத்தம்பி கந்தையா**

(யாழ். மார்க்கட், பாய்க்கடை உரிமையாளர்)

கடந்த 27.11.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாதன் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாதன் இல்லம், உடுவில் தெற்கு,
பாலாவோடை, மல்லாகம் (59679)
- குடும்பத்தினர்.

## Vacancy
### Post of Accountant

We are looking for a committed, creative and energetic individual to join us as an Accountant.

**Essential qualifications & Experience:**

- A degree from a recognised University in the relevant field with full/part qualifications in accountancy (ICASL/CIMA/ACCA)
- At least 3 years professional experience in the capacity of Accountant in the NGO/ Public/ Private sector with sound knowledge in accounting procedure preferably, with Accounting Package.
- Good command of English.
- Good Communication skills.
- Excellent Computer skills
- Ability to establish and maintain office system and procedures.

**Main Responsibilities:**

- Support District Director/ Director of Finance/ Chief Accountant/ Regional Accountant in the entire Operation of Accounts.
- Ensure daily system updates collect and maintain accounting information on Projects and Administration.
- Preparation of Budgets, Financial and Monitoring reports.
- Should be willing to travel to Colombo on short notice.

**Please Note:**

- Closing date for the applications will be on 12th January 2007.
- The above position would be initially for a period of 1 year with 6 months probation.
- Candidates who do not possess the required qualifications are advised to refrain from making applications.
- Only short listed candidates will be called for the interview
- Canvassing will be treated as a disqualification.
- Please submit your CV, together with an approx 300 word essay on how your previous work experience will assist in fulfilling the above post, addressed to

The District Director,
Sewa Lanka District Office,
250, Temple Road,
Nallur, Jaffna.

- **Or by fax or email:**
  Fax No: 021222 9850
  E-mail : jaffna@sewalanka.org

## 2ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்...




ஆழிப்பேரலைக்கு இரையான அன்புச் செல்வங்களே!
ஆண்டிரண்டானதே ஆறவில்லை எம் துயரம். பிஞ்சிலே பறித்த பாதகனை என்னென்று சொல்வோம். நெஞ்சிலே நிறுத்தி நினைவிலே வாழ்கின்றோம். மீண்டும் என் வயிற்றில் பிறந்து மடியில் தவழ வரம் வேண்டுகின்றேன்
உங்கள் அம்மா, அப்பாவும் கதறித் துடிக்கிறார்கள் ஓடி வாருங்கள்!

கோயில் சந்தை வீதி,
கரவெட்டி மத்தி. (63637)
தகவல்:
அம்மம்மா இந்திராணி குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1964 * 05 * 26

மறைவு 2001 * 12 * 21

**திருமதி உமாதேவி மோகனதாஸ்**

(யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை ஆசிரியை)
*திதி: 22.12.2006 ஸப்தமி (வெள்ளிக்கிழமை)*

எமது வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
அன்புத் தீபமாய் இருந்து தன்னை
உருக்கி எமக்கு ஒளியூட்டிய எமது
உயிரினும் மேலான அன்புத் தெய்வமே
ஆயிரம் உறவுகள் மலர்ந்தாலும்
உங்களோடு எமக்கு ஏற்பட்ட உறவு
மீண்டும் மாறுமா தேவியே (ஓம்சாந்தி)
ஐந்தாண்டு முடிந்தாலும் என் தெய்வமே!
உன் திருமுகத்தை நான் எந்தக் காலம் காண்பேனோ?

ஆ.பாலகிருஷ்ணன், ஆ.பவளரெத்தினம்,
ஆ.உசாதேவி, ஆ.அரிதேவி,
ஆ.உமாதேவி, க.வதனா, ர.கல்பனா,
முன்னாள் அதிபர் த.தபேந்திரராசா,
ஆசிரியர்கள், மாணவர்கள் (சிவகுரு வித்தியாசாலை).
தகவல்: ஆ.சுபத்திரையம்மா (தாய்).

சிவபுர வீதி,
வல்வெட்டித்துறை.
(சி/51618)

## நினைவலைகள்

மூன்றாம் ஆண்டு



**செல்லப்பா பரமானந்தம்**

07.03.1933 அன்னைமடியில்
19.03.2003 ஆண்டவன் அடியில்

முதலாம் ஆண்டு



**பரமானந்தம் தேசோவதி**

29.10.1936 அன்னைமடியில்
06.01.2006 ஆண்டவன் அடியில்

திதி: 26.12.2006

கண்ணாகக் கருத்தாக கருதியெம்மை
வளர்த்தெடுத்து எங்கள் வாழ்வும் வளமும்
நலமும் மகிழ்வும் என்றும் நிலையாகக் கொண்டு
வாழ்ந்த எங்கள் அன்பு நெஞ்சங்களே
இன்று இம்மண்ணில் நீங்கள் இல்லாவிட்டாலும்
எங்கள் உள்ளமதில் உங்கள் நினைவுகள்
நிழலாகத் தொடரும்.

54/12, சந்தன மாதா கோவில் வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (63585)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.




**சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும்**

ஏக விநியோகத்தர்கள்:
**நடராஜா ஸ்ரோர்ஸ்**
**பல்பொருள் வாணிபம்**
64, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**T.P.: 222 3854**



(63715)

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் ஹபிடல் லேனில் மிகவும் நவீன முறையில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் விற்பனைக்குண்டு. Air Condition இணைப்புகளும் உயர்தர Architect இனால் கட்டப்பட்ட 02 Bed Rooms, 03 Bed Rooms வீடுகள் உள்ளன. உடனே குடி புகலாம். விலை 50 இலட்சத்திலிருந்து.
தொடர்புகளுக்கு
0777 271222.

## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள் தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.

(சி/50463)

## சேவை நலன் பாராட்டுவிழா

மாவட்ட வைத்திய அதிகாரி
**Dr.சி.கதிரவேல்பிள்ளை**

அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவினை 31.12.2006இல் நடத்த பொதுமக்களின் ஆலோசனைகளையும் பங்களிப்பினையும் வேண்டி நிற்கின்றோம்.

அவர்தம் சேவையில் விருப்புடையோர் நிகழ்வில் பங்குபெறவும், பங்குபெறு தலைத் தரவும் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளரை 021 226 4160 தொலைபேசியில் தொடர்புகொள்ளுங்கள். அத்துடன், 226 3633இலும் அபிவிருத்திச் சபைப் பொருளாளருடனும் தொடர்புபெறவும்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை
அபிவிருத்திக் குழு.

(சி/51649)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் மேற்கு
ஸ்ரீநாகபூஷணி அம்மன்
ஆலயத்திற்கு வசந்த
மண்டபம் அமைப்பதற்கு
நிதி வழங்கி உதவிய

அமரர்

**இராஜரட்ணம் நடராசா**

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்த நாம் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய
பரிபாலன சபையினர்.

(65037)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **வைத்திலிங்கம் நல்லையா**

(ஈஸ்வரன் வெதுப்பக உரிமையாளர்)

கருவிழ் வழிந்த கண்ணீர் துளிகள்
காய்ந்து விட்ட போதிலும்
இதயத்தில் எழுதி வைத்த நினைவுகள்
இளமையுடன் இருக்கின்றன.

நிர்வாகிகளும்
அங்கத்தவர்களும்
யாழ்.மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.

## கணனிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ26

கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு கோண்டாவில் சி.பி.கணனி நிறுவனம் இலவச கணனிக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(1-202)



## 19ஆம் ஆண்டு நினைவுநாள்

*26-11-2006 செவ்வாய்க்கிழமை 3ஆம் நாள்*

**எம்.ஜீ.இராமச்சந்திரன்**

(முன்னாள் முதலமைச்சர், [illegible])

தாவடி, கொக்குவில். (63741)

நன் [illegible] அங்கே
தீமைகள் நிறைந்துவிடக்கூடாது.

## 8ஆம் ஆண்டு நினைவுநாள்

**பொன்.மதிமுகராசா**

(முன்னாள் அனைத்துலக எம்.ஜீ.ஆர்.பேரவைத்தலைவர்)

அனைத்துல எம்.ஜீ.ஆர்.பேரவைத்
தலைமை விழா ஏற்பாட்டுக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு கண்ணீரஞ்சலி

அன்னை மடியில்
05 ★ 01 ★ 1924



ஆழிப் பேரலையில்
26 ★ 12 ★ 2004

அமரர் கந்தப்பு கிருஷ்ணபிள்ளை (விசகடி வைத்தியர்)

உண்மை, அன்பு, நேர்மை இறைபக்தியுடன்
வாழ்ந்து வழிநடத்தி வாழவைத்த தெய்வம்
கருத்துடன் பேணிக் காத்த காவல் தெய்வம்
கதியற்றோர் ஆகிவிட்டோம் கண்ணனைப் பிரிந்ததாலே

பேரப்பிள்ளைகள் 'கண்ணா' என அழைத்தால்
பேருவகை ஐயா உங்களிற்கு
காலம் முழுக்க எமக்காகக் கடமைகள் பல செய்து - நாம்
கடமைசெய்ய விடாமல் போய்விட்ட உங்களோடு
போனதே எங்கள் சந்தோசம்.

'லக்ஷ்மிவாசா',
மரக்காய், மில்றோட்,
புலோலி தெற்கு, புலோலி. (63724)

பிரிவால் துயரும்: குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15.08.1967
திருமதி
புலேந்திரராசா வள்ளிகாந்தா



மலர்வு: 29.11.2002
புலேந்திரராசா பிரவீன்



கருவறையில் கண்ணன்



மலர்வு: 01.05.1937
திருமதி
தம்பையா பாக்கியலட்சுமி



மலர்வு: 06.11.1977
திருமதி
பரிமேலழகன் கவிதா



மலர்வு: 25.07.2004
பரிமேலழகன் தரணி

26.12.2006 இல் ஆழிப் பேரலையால் அள்ளிச் செல்லப்பட்ட எமது அன்புச் செல்வங்களே! இரண்டாவது நிறைவு நினைவு நாளில் உங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

மண்ணிலே மறைந்து விட்டாலும்
நெஞ்சில் நிறைந்திட்ட உங்கள் நினைவுகள்
யுகங்கள் கடந்தாலும்
மறந்திடத்தான் முடியுமா?

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், தந்தை, மருமகன்,
அண்ணா, மாமா
மா.புலேந்திர ராசா.

திருகோணமலை. (63634)

## 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர் மகாதேவன் சதீஸ்
(ஒப்புநோக்குநர், உதயன்)

பிறப்பு 28 - 02 - 1978
இறப்பு 18 - 12 - 2004

திதி:
26.12.2006

*அண்ணாவே! எங்களை விட்டு*
*பிரிந்து இரண்டு ஆண்டுகளா?*
*நம்பமுடியவில்லை உடலால்*
*உங்களைச் சாய்த்தாலும்*
*உணர்வுகளால் எங்களோடு*
*பயணிக்கின்றாய்.*

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் திருவாசக முற்றோதல் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். (202)

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கி ... சக உத்தியோகத்தர்
அமரர் அப்புக்குட்டி துரைச்சாமி
(பாதுகாப்பு உத்தியோகத்தர்)

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த துயருற்ற எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரது குடும்பத்தினருக்கும் உறவினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*முகாமையாளரும் ஊழியர்களும்*
*இலங்கை வங்கி, யாழ். 2ஆம் கிளை*

## கண்ணீருடன் ஈராண்டுகள்

மண்ணில்
26 - 01 - 2004



மண்ணில்
09 - 06 - 1975

விண்ணில்: 26 - 12 - 2004

திருமதி
செல்வந்தா டிலானி ஜெயரஞ்சினி
அருட்செல்வன் ஆகாஷ் செல்வந்தா

'கிருஸ்துவுக்குள் மரித்தவர்கள்
முதலாவது எழுந்திருப்பார்கள்'
(1 தெசலோனிக்கேயர் 4:16)

135, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். (63737)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 22. 08. 1949
மறைவு: 26. 11. 2006

அமரர் கனகாம்பிகை சிறீஸ்கந்தசெல்வன்
(ஓய்வுநிலை யாழ். செயலகம்)

'அம்மா நீங்கள் இல்லையென்றால் வேறுயார் எமக்கு
நீங்கள் இல்லையென்றால் வேறுயார் இருந்துதான் என்ன
மாணித்தால் தான் உங்களை காணமுடியும் என்றால்
அதற்கும் நாம் தயார் அப்போதாவது எம்மைக் காண வருவீர்களா?'

26.11.2006 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

*158 (114), நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். 021 222 5672.* (65045)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
08 . 01 . 1980



ஆழிப்பேரலையில்:
26 . 12 . 2004

செல்வி தனுசியா கொன்சன்ரைன்

(யாழ். தேசியக் கல்வியியற்கல்லூரி 3ஆம் அணி,
உள்ளகப் பயிற்சி ஆசிரியை யா/தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்)

எங்கள் தனுக்குட்டி எங்கம்மா சென்றாய்
எம்மை எல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு
நீ இல்லா வாழ்வினை நினைக்கவும் முடியவில்லை - நாம்
நடைப்பிணமாகவே நடமாடுகின்றோமம்மா
பாட்டுப் பாடி எம்மைப் பரவசமாக்கிடும்
கானம் இசைத்துக் கலகலப்பாக்கிய கானக்குயிலே - உன்
மனம் போல் மாலை சூடி மகிழ்வோடு
மனை சிறக்க வாழ்வாயெனப் பார்த்திருந்தவேளை - நீ
பாசச் சுமையோடு பறந்துசென்ற கொடுமையேன்ன?
அலையின் பிடியிலே அவதியுற்றவேளை - நீ
யாரை நினைத்தாயம்மா? .... நாம்
கையெடுத்த தெய்வங்கள் காப்பாற்றவில்லையம்மா
எங்கள் சின்னக்கா கடைக்குட்டிச் செல்லமே
எளிந்தக் கதியெமக்கு எப்படித் தாங்கிடுவோம்
ஒரேயொரு தடவை ஓடிவர மாட்டாயோ - எம்மிடத்து
ஒளி காட்டத் தேவதையே!

**எமது அன்பு மகளினதும், தந்தையினதும் நினைவாக இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை பணிவன்புடன் அழைக்கின்றோம்.**

*"லக்ஷ்மி வாசா"*
*மரக்காய், மில் றோட்,*
*புலோலி தெற்கு, புலோலி.* (63725)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## நெஞ்சுருகும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி பிரியணி சரவணபவான்

அன்னை மடியில்
26.10.1993

ஆண்டவன் அடியில்
26.12.2005

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக திகழ்ந்தவளே,
எல்லோருக்கும் உனது புன்னகையால் பதில் தந்தவளே,
எம்மையெல்லாம் மீளாத்துயரில் விட்டுச்சென்று விட்டாய்
எந்நாளும் உன் நினைவால் வாடுகிறோம்.

*'வட்டதெனி'*
*அல்வாய் வடமேற்கு,*
*அல்வாய்.* (சி. 51635)

என்றும் உனது நீங்கா
நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டின் இதய அஞ்சலிகள்



மண்ணுலகில்:
11.12.1947

விண்ணுலகில்:
29.12.2003

திதி: 26.12.2006

அமரர் லோகநாயகி பாலசுப்பிரமணியம்

ஆண்டுகள் மூன்று ஓடிவிட்டன உன்னைப் பிரிந்து
ஆனாலும் இன்றும் எம்முடன் இருக்கின்றாய்
அருவமாகவும் எங்கள் குலத்திலகமாகவும்
அன்னையும் நீயே அகிலமும் நீயே எமக்கு

உன் நினைவு தரும் ஆறுதலில்
க. பாலசுப்பிரமணியம் (கணவர்),
பா.முரளிதரன் (மகன்), மு.நிஷாந்தி (மருமகள்),
மு.லோகாஜினி (பேர்த்தி),
செ. ஜெகசோதி குடும்பம் (மைத்துனர்),
மற்றும் உற்றார், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## இனியேனும் திருந்த மனம் வருமா?

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இதேநாளில் டிசெம்பர் 26இல் - தென்கிழக்காசியா மற்றும் தென்னாசிய நாடுகளில் பேரழிவை - மனிதப் பேரவலத்தை - உண்டாக்கிய 'சுனாமி' எனப்படும் ஆழிப்பேரலை அல்லது கடற் கோள் ஏற்படுத்திய அனர்த்தம் இப்போது சரித்திரத்தில் பதிவாகிவிட்டது.

இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, மியன்மார், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இரண்டரை இலட்சத்துக்கும் மேற் பட்ட மனித உயிர்களை சுனாமி பலி எடுத்தது.

இயற்கையின் அந்தக் கோரத்தாண்டவம் இலகுவில் மறந்துவிடக்கூடியதல்ல. அது இன்னும் பல வருடங்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களின் உறவுகளிடம் நினைவழியாத சோகத்தை எழுதிச் சென்றுவிட்டது.

2004ஆம் ஆண்டின் ஆழிப்பேரலை இந்தோனேசியாவில் 1,84,135 மனித உயிர்களைக் காவுகொண்டது. அடுத்ததாக இலங்கையிலேயே கூடுதலானோர் பலியாகினர். மொத்தம் 38,195 பேர் இந்தப் பேரனர்த்தத்துக்கு இரையாகினர்.

அம்பாந்தோட்டையில் 4,500 பேரும், காலியில் 3,774 பேரும், அம்பாறையில் 9,051 பேரும், மட்டக்களப்பில் 2,975 பேரும், முல்லைத்தீவில் 2,902 பேரும், யாழ்ப்பாணத்தில் 1,256 பேரும் பலியானதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மற்றும் ஆறு மாவட்டங்களில் மக்கள் உயிரிழப்புகள் குறைந்த எண்ணிக்கையில் ஏற்பட்டன.

ஆழிப்பேரலையால் உண்டான மனித உயிரிழப்புகளைத் தவிர, காணாமற்போனோர், காயமடைந்தோர் என்றும் மக்களுக்குப் பாதிப்புகள் உண்டாகின. அவற்றுக்குக் கூடுதலாக கடற்கரையோரம் வாழ் மக்களுக்கு கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான சொத்தழிவுகள் உண்டாகின.

மக்களுக்கு உண்டான மேற்கூறப்பட்ட பாதிப்புகளைவிட, உடனடிச் சூழல் பாதிப்புகளையும் நீண்டகாலத்துக்கான இயற்கை வளப் பாதிப்புகளையும் ஆழிப்பேரலை விட்டுச் சென்றது.

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் ஏற்பட்டதுடன், அவர்களிடம் உளவியற் பாதிப்புகளும் மன வடுக்களும் நிலைத்துவிட்ட பரிதாபகரமான நிலையும் கவனத்தில் எடுக்கப்படவேண்டியனவாகும்.

இந்து சமுத்திர நாடுகளில் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையையும், வாழ்வாதாரங்களையும் பறித்தெடுத்த ஆழிப்பேரலையின் தாக்கத்தில் இருந்து சம்பந்தப்பட்ட மக்களை மீட்டெடுப்பதற்கு, மீள்கட்டுமானத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட சர்வதேச மட்டத்திலான திட்டங்கள் வகுத்து செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென, அவர்களை மீண்டும் முந்திய நிலைக்குக் கொண்டுவந்து வாழச் செய்தவற்கான மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்குப் பல சர்வதேசத் தொண்டர் அமைப்புகளும் செயற்பட்டுவருகின்றன.

இலங்கையிலும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களின் மறு வாழ்வுக்கும் மீள் கட்டமைப்புக்கும் உதவிட பல சர்வதேச நிறுவனங்களும் நாடுகளும் முன்வந்தன; செயலாற்றுகின்றன.

ஆனால் இந்தப் பணிகள் ஒப்பீட்டளவில், வடக்கில் மந்தமாகவே உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் ஆழிப்பேரலை அனர்த்த மீளாய்வு அலுவலகம் அண்மையில் கவலை தெரிவித்திருந்தது.

அது குறித்து, கடந்த வாரம் (21.12.2006) இப்பத்தியில் எழுதியிருந்தோம். ஆழிப் பேரலை அனர்த்த மீள் கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பு உத்தேசிக்கப்பட்டவாறு செயற்படாமையே, அதற்குப் பிரதான காரணம் என்பது அதில் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது.

ஆழிப்பேரலை அனர்த்த மீள் கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்று இல்லாததால் சுனாமியின் தாக்கத்திலிருந்து இலங்கையர்களால் மீளமுடியவில்லை என்று அந்த அறிக்கையில் மிகக் குறிப்பாக எழுதப்பட்டிருந்தது.

ஐ.நா. அலுவலகம் மட்டுமன்றி, பிரிட்டனின் முன்னணி துயர் துடைப்பு நிறுவனம் ஒன்றும், இலங்கையில் ஆழிப்பேரலை மீள் நிர்மாணப் பணிகளின் அளவிலும், பணிகள் தொடர்வதிலும் நாட்டின் வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பதாக இப்போது சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கங்களின் சரித்திரத்தில், தென்பகுதிப் பிரதேசங்களும் தமிழர் பிரதேசங்களும் எந்த வேலைத் திட்டத்திற்குமோ அல்லது மக்களின் நலன்புரி சேவைகளுக்குமோ சமமாகப் பார்க்கப்பட்டதாக "வரலாறு" இல்லை. தொழில் வாய்ப்பு, கல்வி வசதி, விவசாயம், மீன்பிடி உட்பட பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் சேவைகள், உதவிகள் உட்பட்ட சகல விடங்களிலுமே தமிழ்ப் பகுதிகள் புறக்கணிக்கபபடுவதும் பாகுபாடு காட்டப்படுவதும் சந்ததி சந்ததியாக காலங்காலமாக தொடர்ந்துவரும் பெரும் சாபக்கேடு.

ஒரு சிறிய உதாரணம். ஆழிப்பேரலை வந்து இரண்டு வருடங்களாகியும் யாழ். மாவட்டத்தில் அதனால் பாதிப்புற்ற மக்கள் இன்னும் இடைத்தங்கல் முகாம்களிலேயே வாழ்கிறார்கள். வடமராட்சி கிழக்கில் இதுவரை 16 வீடுகளே முறையாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சாபக்கேட்டின் விளைவே நாடு இன்று உள்ள சீரற்ற நிலை என்பதனை விளக்கமாகக் கூறவேண்டிய தேவையில்லை. ஆட்சிக்குவரும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பதவியில் இருக்கும்போது ஏற்க மறுத்தாலும் அதனை இழந்த பின்னர் ஒப்புக்கொள்ளும் விடயம் இது.

இலங்கைக்கு வரும் உதவியில் மிகப் பெரும் பகுதி வெளிநாடுகளால் தரப்படுபவையே. ஆனால், அவ்வாறு நிதியுதவி வழங்கும்நாடுகளின் அரசுகள் தமது உதவிகள் இலங்கையின் எல்லாப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு உரிய அளவில் அல்லது குறைந்தளவிலாயினும் போய் சேருகின்றனவா, செறிகின்றனவா என்பது குறித்து சமீப காலம்வரை அக்கறை கொண்டதில்லை. ஒரு நாட்டு அரசாங்கம் இன்னொரு நாட்டு அரசாங்கத்துக்கு வழங்கும் நிதியுதவியாக கணக்கில் வைத்துப் பேசாமல் இருந்து வந்தன.

ஆயினும், இப்போது அந்த நிலைமையில் சற்று முன்னேற்றம் உண்டாகி வருவதை அவதானிக்கமுடிகிறது. தாம் வழங்கும் நிதி உதவிகள் அவை சேரவேண்டிய மக்களுக்குக் கிடைக்கின்றனவா என்பதனை அவதானித்து இலங்கை அர சுக்கு ஒரு "குட்டுப்போடும்" நிலைக்காவது மாற்றம் வந்தி ருக்கிறது.

சுனாமி மீள்கட்டமைப்பு நிதியை இலங்கைக்கு வழங்குவதை நிறுத்துமாறு சர்வதேசங்களிடம் ஜேர்மன் கேட்டிருப்பதனை இதில் ஒரு திருப்புமுனை என்று கொள்ளலாம்.

இலங்கையில் சிவில் யுத்தம் மீண்டும் தொடங்கி விட்டதால் ஜேர்மன் தனது நிதி உதவிகளை நிறுத்திவிட்டது. ஏனைய மேற்கு நாடுகளும் அவ்வாறே செய்யவேண்டும் என்று அந்நாட்டின் உதவி அபிவிருத்தி அமைச்சர் வைகோரிக் கியூஸ் கோரியுள்ளார்.

சமாதான முயற்சிகளை இலங்கை அரசு ஆரம் பிக் கும் வரை சுனாமி மீள்கட்டமைப்புக்கான நிதி உதவியை நிறுத்துமாறும் அவர் தொடர்புபடுத்தி வலியுறுத்தி உள்ளார்.

இத்தகைய கணக்காணிப்பேனும் இலங்கை அரசிடம் மாற்றத்தைக் கொண்டுவர உதவும் என்று எதிர் பார்ப் போமாக.

இனியேனும் திருந்துவதற்கு மனம்வருமா?.

# ஆழிப்பேரலை அனர்த்தத்தின் நினைவு தின வைபவங்கள் இன்று

## காலி கோட்டையில் பிரதான நிகழ்வு

காலி, டிசெ.26

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் இன்று நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம் பர் மாதம் 26 ஆம் திகதி காலை வேளையில் இலங்கை உட்பட தென் கிழக்காசிய நாடுகளைத் தாக்கிய இராட்சதப் பேரலை காரணமாக இந்நாடுகளைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும், இடம்பெயர்ந்தும் அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இலங்கையில் பேரலை அனர்த்தத்தின் இரண்டாவது ஆண்டு நினைவு தினமான இன்றைய தினத்தை தேசிய பாதுகாப்புத் தினமாக அரசு பிரகடனம் செய்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தேசிய பாதுகாப்புத் தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை அனர்த்த முகாமை அமைச்சு மேற்கொண்டுள் ளது. பேரலை அனர்த்தத்தின் இரண் டாவது ஆண்டு நினைவு தினத்தை நாடளாவிய ரீதியில் அனுஷ்டிப்பதற்கான விரிவான ஏற்பாடுகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த மக்களை நினைவு கூரும் வகையில் இன்று காலை 9.25 மணி தொடக்கம் 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. இந்த நேரத்தில் நாட்டில் அனைத்து வாகனப் போக்குவரத்துகளையும் நிறுத்தி அஞ்சலி செலுத்துமாறு பொலிஸார் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை -

இன்றைய தினத்தில் நாட்டின் பல பாகங்களிலும் சுமார் 80 ஆழிப் பேரலை முன்னெச்சரிக்கைத் தூபிகளை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை நிதியுதவியுடன் இந்தத் தூபிகள் நிர்மாணிக்கப்பட உள்ளன.

தேசிய பாதுகாப்புத் தினம் தொடர்பான பிரதான வைபவம் இன்று காலை காலி கோட்டைக்கு அருகாமையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது பேரலை அனர்த்தத்தின் நினைவாக 1,000 வெள்ளை பலூன்கள் பறக்கவிடப்பட்டுள்ளன. இரண்டு நிமிட மௌன அஞ்சலி உட்பட சர்வமத அனுஷ்டானங்களும் இடம்பெறவுள்ளன.

தேசிய பாதுகாப்புத் தினத்தை ஒட்டி பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளும் இந்த வைபவத்தின்போது வழங்கப்படவுள்ளன. (157)

## ஆள்கடத்தல்கள், கொலைகளில் அரச நிறுவனங்களுக்குத் தொடர்பு

### மேல் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசம்பர் 26

கொழும்பு நகரில் இடம்பெற்று வரும் நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்பவங்களுடன் முக்கியமான அரச நிறுவனங்கள் தொடர்புபட்டிருக்கின்றன என்று மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சித்சிறி கஹட்டபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், வழமை நிலையை ஏற்படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரி கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அண்மையில் இடம்பெற்ற மேல் மாகாணசபைக் கூட்டத்திலேயே அவர் இதைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் இடம்பெற்று வரும் நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்பவங் களுடன் முக்கிய அரச நிறுவனங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றமை தெரிய வந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்களை இல்லாதொழித்து நிலைமையை வழமைக்குக் கொண்டுவர ஏன் மேல் மாகாண சபை பின்நிற்கின்றது என்று மக்கள் கேட்கின்றனர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மேல் மாகாண சபை, அரசிற்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் கொலைகளும், காணாமல் போகும் சம்பவங்களும் தொடர்ந்து கொண்டே போகும்.

இந்த நிலை காரணமாக மேல் மாகாணத்தில் மக்கள் பெரும் அச்சத் துடன் வாழ்கின்றனர். அவர்களின் அச்சத்தைப் போக்க மேல் மாகாண சபை முன்வர வேண்டும்." - என்றார். (ஐ)

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.26

வண்ணார்பண்ணை ஐயனார் எரிபொருள் நிலையத்தில் டிசெம்பர் மாதத்துக்குரிய மண்எண்ணெய் விநியோகம் தற்சமயம் இடம்பெறுகின்றது.

ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101, ஜே/125, ஜே/127, ஜே/128 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மண்எண்ணெய் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (1)

## புத்தாண்டுக்கு 'கேக்' தயாரிக்க இன்று பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.26

புதுவருடத்தை ஒட்டி 'கேக்' தயாரிப்பதற்கு பேக்கரிகளுக்கு இன்று பொருள்கள் வழங்கப்படவிருக்கின்றன என அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கேக் உற்பத்தி செய்வதற்கான பொருள்களுடன் 20ஆயிரம் முட்டைகளும் பேக்கரிகளுக்கு வழங்கப்படும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு கேக் தயாரிக்க மூலப்பொருள்கள் வழங்கி, ஒரு கிலோ 350 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டும் என்றும் அறுவுறுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் ஒருசில பேக்கரிகள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் அறிவுறுத்தலை மீறும் பேக்கரிகளுக்கான மா விநியோகம் மறுபரிசீலனை செய்யப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார். (1)

## 100 மெற்றிக்தொன் சவர்க்காரம் கப்பலில் வந்து சேர்ந்துள்ளது

யாழ்ப்பாணம், டிசெ.26

குடாநாட்டு மக்களுக்குப் ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் பங்கீட்டுக்கு சவர்க்காரம் வழங்கப்படவுள்ளன.

'றுகுணு' கப்பல் மூலம் நூறு மெற்றிக்தொன் சவர்க்காரம் எடுத்து வரப்பட்டுள்ளது. தற்சமயம் கப்பலில் இருந்து சவர்க்காரம் இறக்கப்படுகின்றது. இறக்கி முடிந்தவுடன் மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று - அரச அதிபர் தகவல் தந்தார்.

அதேவேளை -

விமானம் மூலம் மாமைற், ஹோர்லிக்ஸ், நெஸ்ரமோல்ட், குழந்தைகளுக்கான பனடோல், பனடோல் சிறப், சஸ்ரோயின், கோல்டன் றஸ்க் ஆகியன எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களுக்கான விற்பனை விலை அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் இன்று கிடைக்கும். உடன் விநியோகம் ஆரம்பமாகும்.

மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் பொருள்கள் வந்துள்ள காரணத்தால் அவசிய தேவையுடையோர் மாத்திரம் கொள்வனவு செய்யவும்.

இந்தப் பொருள்கள் கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடகியுள்ளது - என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (1)

## நாளை

மார்கழி 12
புதன்கிழமை
27.12.2006
திதி : சப்தமி
பிற்பகல் 10.08
நட்சத்திரம் : பூரட்டாதி
காலை 07.02
சுபநேரம் : 04.57 - 06.27
ராகுகாலம் : 12.27 - 01.57

## விசேட ஆராதனைகளுடன் நத்தார் கொண்டாட்டங்கள்

### வழமையான கலகலப்பு ஏதும் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.26

குடாநாட்டில் நத்தார்தினக் கொண்டாட்டங்கள் விசேட ஆராதனைகளுடன் அமைதியாக இடம்பெற்றன.

வழமையான கலகலப்பு ஏதும் இன்றி குதூகலமற்ற நிலையில் கிறிஸ்தவ மக்கள் நத்தாரைக் கொண்டாடினர்.

ஆலயங்களில் இடம்பெற்ற ஆராதனைகளில் மக்கள் கலந்துகொண்டு பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

வழமையான கரோல் நிகழ்ச்சிகளோ, கொண்டாட்டங்களோ நேற்று இடம்பெறவில்லை. (1-88)

## சமூக சேவை அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கண் சிகிச்சைமுகாம்

யாழ்ப்பாணம், டிசெ.26

குடாநாட்டில் கண்பார்வைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்கருதி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அடுத்த மாதம் 18ஆம், 19ஆம் திகதிகளில் கண் சத்திரசிகிச்சை முகாமை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த முகாமில் பங்குகொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்குமுன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது.

அமைச்சின் யாழ். அலுவலகத்திலோ, அருகில் உள்ள பிரதேச செயலகங்களிலோ பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் -

பரிசோதனையின்பின் தேவையான மூக்குக் கண்ணாடிகளும், கண்வில்லைகளும் வழங்கப்படும் என்றும் - அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்பல் மாலுமிகள் நேற்று கிளிநொச்சியில் புலிகளிடம் விடைபெற்றபோதும், பின்னர் ஓமந்தைச் சோதனைச் சாவடியைக் கடக்கும் போதும் எடுக்கப்பட்ட படங்கள்.

# இலங்கை அகதிகள் 7 பேர் நடுக் கடலில் தத்தளிப்பு

## தமிழக மீனவர்கள் மீட்டுக் கரை சேர்த்தனர்

அறந்தாங்கி, டிச. 26

இலங்கையிலிருந்து நாட்டுப் படகில் தப்பி வரும் வழியில் படகு இயந்திரம் பழுதானதால் நடுக் கடலில் சிக்கிய ஒரு மாதக் கைக்குழந்தை உட்பட 7 அகதிகளை மீன்பிடித்துக் கொண்டிருந்த புதுக்சே ட்டை மாவட்டம் ஜகதாபட்டினம் மீன ர்கள் மீட்டுத் தங்கள் படகில் அழைத்து வந்தனர் - என்று 'தினமணி' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையில் அரசுக்கும், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் தொடர்ந்து சண்டைகள் நடைபெற்று வருவதால், அங்கு வாழும் தமிழர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் படகுகள் மூலம் அகதிகளாக இந்தியா வருவது சமீபகாலமாக அதிகரித்துள்ளது.

அதேபோல், இலங்கை - யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த நித்தியானந்தம் (வயது-38), அவரது மனைவி, ஒரு மாதக் குழந்தை உட்பட 7 பேர் நாட்டுப் படகு மூலம் இந்தியா வர சனிக்கிழமை இரவு புறப்பட்டனர்.

இவர்கள் படகு நடுக் கடலில் வந்த போது படகின் இயந்திரம் பழுதடைந்தது. இதனால், அகதிகள் உதவி கேட்டுச் சத்தமிட்டனர். இதையடுத்து, அப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஜகதாபட்டினம் மீனவர்கள் பழுதான படகில் இருந்தவர்களை மீட்டுத் தங்களது மீன்பிடிப் படகில் ஏற்றிக் கொண்டு கரை திரும்பியுள்ளனர்.

## முதல்வர் கருணாநிதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பினரிடம் மன்மோகன் சிங் கூறியுள்ள நிலையில், இலங்கை அரசு, கிழக்கிற்குத் தனியான ஆளுநர் ஒருவரை நியமித்தமைக்கும், வடக்கு - கிழக்கை மூன்று நிர்வாக அலகுகளாகப் பிரித்து - கிழக்கில் இருந்து திருகோணமலையையும் வேறு மாகாணத்துடன் இணைத்து வடக்கு - கிழக்கைத் துண்டு துண்டாக உடைத்துவிட அரசு மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்கும் தமது அதிருப்தியை முதல் வரிடம் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசின் இந்தத் தான் தோன்றித்தனமான முயற்சியானது இந்தியாவுக்குப் பாரிய சவாலாக விளங்குகின்றது என்றும் இலங்கையின் சமாதான முயற்சியில் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், தமிழ் மக்கள் தற்போது அனுபவித்து வரும் அவலநிலை தொடர்வதற்கு இது காரணமாக அமைந்து விடும் என்றும் கூட்டமைப்பினர் முதல்வரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகவும் இதயசுத்தியுடன் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் இலங்கை அரசிற்கு இந்தியா தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களின் அவலங்களை இல்லாதொழிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனகூட்டமைப்பினர் முதல்வரிடம் இச்சந்திப்பின்போது வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மன்மோகன் சிங்கிற்கும், கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பின்போது பரிமாறப்பட்ட விடயங்கள் பற்றி அறிவதற்காக முதல்வரே கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்தார் எனக் கூறப்படுகின்றது. கூட்டமைப்பினர் இன்று அல்லது நாளை இலங்கைக்குத் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் டயலொக், மொபிட் டல் ஆகியவற்றின் சேவைகள் செயற்பட ஆரம்பித்துள்ளன.

சகல இடங்களுக்குமான வழமையான சேவை இன்னும்சில தினங்களில் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-88)

## சேருநுவரவில் பெண்ணின் சடலம்

திருகோணமலை, சேருநுவர - தெஹிவத்தைப் பகுதியில் நேற்றுத் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெண் அவரது வீட்டினுள் சடலமாகக் காணப்பட்டார் என்று சேருநுவரப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்நீத்த மக்களுக்காகத் தேவாலயங்களில் விசேட ஆத்மா சாந்திப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

கிழக்கு மாகாணத்தின் எல்லைக் கிராமங்களில் வாழும் கிறிஸ்தவ மக்கள் இந்து, இஸ்லாமிய மற்றும் பௌத்த மக்களுடன் இணைந்து கிறிஸ்து பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர். வாகரையிலிருந்து இடம்பெயர்ந்துள்ள கிறிஸ்தவ மக்கள், மட்டக்களப்பில் நலன்புரி நிலையங்களில் இயேசு பிறந்த தினத்தை அமைதியாக அனுஷ்டித்தனர். (ஐ)

## செஞ்சிலுவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'பர்ஹா- III' என் னும் இந்தக் கப்பல் இயந்திரம் பழுதடைந்து கடலில் தத்தளித்தது. அச்சமயம் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அக்கப்பலையும், அதிலிருந்த மாலுமிகளையும் பாதுகாத்துக் கரை சேர்ந்தனர்.

முல்லைத்தீவுக் கரையோரமாக நங்கூரமிட்டிருக்கும் இந்தக் கப்பலை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடல் பகுதியிலேயே கப்பல் நிறுத்தப்பட்டிருக்கிறது. (ஐ)

## நவம்பர் மாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, உள்நாட்டில் இடம்பெயரும் மக்களின் தொகை அதிகரிப்பதையடுத்து யுனிசெவ் அடுத்த ஆண்டிற்கான நிதியுதவியை அதிகரித்துள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களை பராமரிப்பதற்கும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும் பொருட்டும் அடுத்த ஆண்டுக்கு '5 மில்லியன் அமெரிக்க டொலர்களை யுனிசெவ் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதி மூலம் 4 லட்சத்து 65 ஆயிரம் மக்களை பாதுகாத்தல் என்ற அடிப்படையிலேயே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியின் கீழ் பழைய மற்றும் புதிதாக இடம்பெயர்ந்தவர்களுக்கு தேவையான நலன்புரி உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, 2005 ஆம் ஆண்டு 8.5 மில்லியன் ரூபாவே உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அது தவிர ஆழிப்பேரலை பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 4.3 மில்லியன்னை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## இந்தியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிலிருந்து படகு ஒன்றின் மூலம் இந்த அகதிகள் திரும்பிவரும் வழியிலேயே கைது செய்யப் பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து படகு ஒன்றின் மூலம் இந்த அகதிகள் திரும்பி வரும் வழியிலேயே கைது செய்யப் பட்டனர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட 23 அகதிகளும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தயாரிக்க சர்வகட்சி நிபுணத்துவக் குழுவின் யோசனைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

ஜே.வி.பி. போன்ற சிறிய ஒரு கட்சி, சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் இருந்து விலகியதைக் கருத்தில்கொண்டு வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தாமதப்படுத்தக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-12)

## பள்ளிமுனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலுக்கு நீண்டநேரமாக துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறப்பட்டது. காயமடைந்த 3 பொலிஸாரும் மன்னார் பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஹெலிகொப்டர் மூலம் அனுராதபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். உயிரிழந்த பொலிஸாரின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த)


CHEMISTRY
Group Class
2008 A/L
GASES
ஆரம்பமாகின்றது
புதன் 4 a.m. 27.12.2006
REPEAT
சனி, ஞா 12.00
தி, செ, வெ 2.30
நடைபெறுகின்றது.
DIAS
B.Sc (Hons) Spl.chem
பழம் Rd, கந்தர்மடம்
College of Chemistry

N.C.A
கல்வி நிலையம்
கே.கே.எஸ் வீதி, இணுவில்
A/L 2009
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 30.12.06 சனி
பொருளியல் : N.B.
கணக்கீடு : N.
வணிகக்கல்வி : S.
கலைப்பிரிவு
ஆரம்பம் : 01.01.2007 திங்கள்

NEW SCIENCE COLLEGE
மின் காந்தத் தூண்டல்
MON - WED 2.30 - 3.30
ஆரம்பம் : 27.12.2006
இலத்திரனியல்
Thu, Fri - 2.30 - 3.30
ஆரம்பம் : 28.12.2006
By : கருணாநிதி

SPOKEN ENGLISH WITH GRAMMAR
By:V.Jenthan
வகுப்புகள் நடைபெறும் இடங்கள்
N.C.A - இணுவில்
(Sat, Sun 11.30 a.m)
(Mon, Wed 3 p.m)
(Sat, Sun 4 p.m)

NEW A.A.C
(கலை வர்த்தகக் கூடம்)
சுன்னாகம்
அளவையியல்
திரு.N.Pதீபன்
நேரம் : செவ், வியா 10 a.m

JAFFNA TECHNICAL INSTITUTE
தொட்டிலடி, சங்கானை.
[சனசமூக நிலையம் அருகில்]
புதிய பிரிவுகள் ஆரம்பம்
MS Office, DTP, Computer
Hard ware விவரங்கள் நேரில்

இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளது.
MCS
Supported By UNDP/JRRP
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 29-12-2006 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

நட்சத்திரம் நலிவடைய சித்திவிநாயகன் சக்தி இழக்க கலையும் வர்த்தகமும் கதி கலங்க மாணவரின் தேவையே சேவை எனக் கொண்டு சுன்னாகத்தில் புதியதொரு உதயம்
New A.A.C 2007 2008 2009 A/L
கலை வர்த்தகக் கூடம் - சுன்னாகம்




| கலை | வர்த்தகம் |
|---|---|
| தமிழ் : திரு.குழந்தை | பொருளியல் : திரு.M.Pகயேந்திரன் |
| அளவையியல் : திரு.N.P.தீபன் | கணக்கியல் : பிரபல ஆசிரியர் |
| நாட/அரங்கியலும் : திருR.ரமேஸ் | வர்த்தகம் : திரு.யசோ |
| இந்து நாகரிகம் : திரு.S.ரமணன் | Spoken English : திரு.பிறிற்றோ |
| கிறிஸ்தவம் : திரு.வசந்தன் | |
| அரசறிவியல் : பிரபல ஆசிரியர் | |
| புவியியல் : பிரபல ஆசிரியர் | |



## மரண அறிவித்தல்

### கந்தையா திருச்சிற்றம்பலம்

(முன்னாள் பட்டின சபைத் தலைவர் - சங்கானை, முன்னாள் பணிப்பாளர் - உதயன், முன்னாள் பொது முகாமையாளர் - ஈழநாடு)



சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் மயிலணியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருச்சிற்றம்பலம் நேற்று (25.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் கணவரும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் நாகபூஷணி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இலங்கைநாதன் மற்றும் ரதி, பிறேமா, சிவசோதி, துரைசிங்கம், குமாரசுவாமி, பரமேஸ்வரி, சந்திரசேகரன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் சங்கானை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்குத் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.

தகவல்:
திருமதி இ.நாகபூஷணி (தங்கை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.12.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.